**நானும் என் குழுவும் 12.04.2015 Zürich என்னும் பட்டணத்திற்கு சென்றிருந்தோம். ஆராதனை ஆரம்பித்தது முதல் பரிசுத்த ஆவியானவர் எங்கள் நடுவிலே இருப்பதை நாங்கள் உணர்ந்தோம். துதி தொழுகையின் நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் எனக்கு சொன்னார் இங்கே ஒருவர் மணிக்கட்டில் வலியோடு இருப்பதாக நான் குணமாக்குதலை அருளுகிறேன் என. அந்த சொல்லப்பட்ட சகோதரி ஆராதனை முடிந்ததும் ஜெபத்திற்காக முன்னோக்கி வந்திருந்தார்கள். தேவனே அதை பேசி இருந்தார் என்று அறிவது மிகவும் முக்கியம்.**

**நீங்கள் தேவனுடைய பிரசன்னத்துக்குள் கடந்து செல்வதற்க்கு என்ன இருளான காரியங்கள் உங்களுக்கு தடையாய் இருந்தாலும் தேவன் அதை உங்களுடைய வாழ்வில் வெளிச்சத்திற்கு கொண்டுவர விரும்புகிறார். அப்பொழுது இருள் ஒழிந்துபோகும். எங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்திலும் எந்த வியாதியும் வலியும் இருளும் இருக்க முடியாது. நாங்கள் சமாதானத்தோடு வாழ்வதே அவர் சித்தமாகும்.**

**பிரசங்க நேரத்தில் நாங்கள் முன்னோக்கி பார்க்க வேண்டும் என்பதை தேவன் உணர்த்தினால் உங்கள் சூழலை பார்த்து எல்லைகள் உள்ளன என்று நினையாதிருங்கள். ஏனெனில் தேவன் எங்களுடைய எல்லைகளை பெருப்பிக்க விரும்புகிறார். தேவன் தம்முடைய எழுப்புதலின் ஆவியை அளவுக்கு அதிகமாக ஊற்றுகிறார். தேவன் எங்களுடைய வாழ்கையின் எல்லாப் பாகங்களையும் அதாவது வேலை இடங்கள் பணங்கள் குடும்பம் சபைகளில் அதிகமாக பெருகப் பண்ணுவார். அவர் எங்களுடைய எல்லைகளை விரிவாக்க விரும்புகிறார். எங்களுடைய நேசமுள்ள சிருஷ்டி கர்த்தரின் இருதயத்தை நோக்கி பார்போம்.**

**ஏசாயா 54:2**

உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து.

Jenan Joseph